1986 ஏப்ரல் 26]

யினர் பிடிக்கிறார்கள். ஆனால் சிலையை வாங்குகின்றவர்கள், அரசியல்வாதிகளாக இருந்து கொண்டும், பெரிய பணக்காரர்கள் என்ற போர்வையில் இருந்துகொண்டும் இருக்கிறார்கள். அப்படிச் சிலையை வாங்குகின்றவர்கள் இருக்கின்ற காரணத்தினால் தான் சிலைத் திருட்டுக்கள் அதிகமாக இருந்து கொண்டு இருக்கின்றன. எனவே, அப்படி சிலை வாங்குகின்றவர்களையும் பிடித்து தண்டனை கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சிலையை வாங்கி வைத்திருப்பவர்களும் கடுமையான சட்ட விதிகளின்கீழ் கைது செய்யப்பட்டு, வழக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கீழையூர் வீரட்டேஸ்வரர் ஆலயத் திருப்பணி.

574—(வினா எண். 4036)—திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூரில் உள்ள கீழையூர் வீரட்டேஸ்வரர் ஆலயத் திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ). ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி அவர்களின் பொன்விழாக் குழுவினர் இத்திருப்பணியை நன்கொடையாக செய்ய மேற்கொண்டுள்ளனர். திருப்பணி வேலைகள் இன்னும் துவக்கப்படவில்லை. வேலைகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வீரட்டேஸ்வரர் ஆலயம் என்பது அஷ்ட வீரட்டானம் எனப்படும் எட்டு வீரட்டானங்களில் ஒன்றாகும். மிகப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயம் இப்பொழுது மிகவும் சீர்கேடாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி அவர்களின் பொன்விழாக் குழுவினர் மேற்கொண்டுள்ளதாகக் கூறினார்கள். அந்த நிதியிலிருந்து ரூபாய் 65,000 மட்டுமே இந்த ஆலயத்திற்காக ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த ஆலயத்தைத் திருப்பணி செய்வதற்கு அந்தத் தொகை போதாமல் இருப்பதால் நம்முடைய அறநிலையத் துறை ஏதாவது நிதியை ஒதுக்கி

இந்தத் திருப்பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய ஜெயேந்திர சரஸ்வதி அவர்களின் ஐம்பதாவது ஆண்டு விழாவை ஒட்டி தமிழகத்தில் ஐம்பது ஆலயங்களின் திருப்பணியை இந்த விழாக் குழுவினர் மேற்கொண்டு தங்களுடைய செலவிலே நிறைவேற்றுவதாக ஒரு திட்டத்தைத் தயாரித்தார்கள். அறநிலையத் துறையின் மூலம், அப்படி அவர்கள் எந்தெந்த ஆலயங்களில் திருப்பணி செய்ய விரும்பி தங்களுடைய கருத்தைத் தெரிவிக்கிறார்களோ அதற்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்து அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த ஐம்பது ஆலயங்களில் இந்த ஆலயமும் அடங்குகிறது. அவர்கள் எவ்வளவு தொகை கொடுக்கிறார்கள், எவ்வளவு தொகையில் திருப்பணிகளை மேற்கொள்கிறார்கள், என்ன செலவைச் செய்கிறார்கள் என்பதைப்பற்றி அறநிலையத் துறை கவலைப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் 65,000 ரூபாய் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு எங்களிடத்திலே தகவல் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே முயற்சி எடுத்து அந்தத் திருப்பணியைச் செய்து முடிக்கிறோம் என்று ஏற்றுக்கொண்டிருக்கின்ற அந்தக் குழுவினர் மிக விரைவில் துவங்கி முடிப்பதற்கு அவர்களும் முன் வந்து உதவி செய்தால் இந்தத் திருப்பணி விரைவில் நிறைவு பெறும். காரணம், அது அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற திருப்பணியாகும். ஆகவேதான் அறநிலையத் துறை இதிலே முழுமையாக ஈடுபடவில்லை. ஆனால் துணை ஆணையாளருக்குத் தகவல் தெரிவித்து, இந்தத் திருப்பணியை விரைவில் நடத்தி முடிக்க வேண்டுமென்று நாம் அறிவுறுத்தியிருக்கிறோம். இந்த ஆலயத்தின் ஒரு உப கோயிலாக இருக்கின்ற தேரடி வினாயகர் கோயிலை வேறொரு நன்கொடையாளர் தங்கள் செலவிலே திருப்பணியைச் செய்வதற்கு இந்தத் துறையின் அனுமதியைப் பெற்று அந்தத் திருப்பணியை முடிக்கின்ற தருவாயில் இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பாடல் பெற்ற மிகச் சிறந்த ஆலயத்தின் திருப்பணியை உடனடியாக ஆரம்பித்து நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்பதைப் போலவே அங்கே செயலிலே ஈடுபட்டால் மிக விரைவிலே திருப்பணி நிறைவுறும்.

திரு. சு. சிவராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே இருக்கிற வினாயகர் ஆலயத்தை வேறு ஒருவர் திருப்பணி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த வினாயகர் ஆலயத்திற்கு திருப்பணி செய்து கொண்டிருப்பது தற்போது எங்கள் குடும்பத்தாராகும். அதுபோலவே

1986 ஏப்ரல் 26]

தற்போது அறநிலையத் துறையிலிருந்து ஏதாவது நிதி ஒதுக்கினால் நானும் பொதுமக்களிடம் சென்று நிதி வசூல் செய்து இந்தத் திருப்பணியை மிகவும் நல்லமுறையில் நடத்தமுடியும் என்பதற்காகத்தான் நமது அறநிலையத் துறை மூலமாக கொஞ்சம் நிதியாவது ஒதுக்கிக் கொடுங்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் கூறிய ஆலோசனையின்பேரில் நானும் முன் நின்று இந்தத் திருப்பணியை நடத்துவதற்கு உதவியாக இருப்பேன் என்று இந்தத் தருணத்தில் கூறிக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு நிதியிலிருந்து ஏதாவது இந்த ஆலயத்திற்கு ஒதுக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஜயேந்திர சரஸ்வதி அவர்களின் 50-வது ஆண்டு விழாவினையொட்டி நடைபெறவேண்டிய திருப்பணி என்கிற அந்தப் பட்டியலிலிருந்து இதை விலக்கிக் கொள்கிறார்களா அல்லது அந்தக் குழுவினரே இந்தத் திருப்பணியை தொடங்க இருக்கிறார்களா என்ற விவரத்தைத் தெரிவித்து அந்தத் திருப்பணிக்கு எவ்வளவு தேவை, எவ்வளவு திருப்பணி நடைபெறவேண்டும் என்கிற விவரத்தையும் திட்டவட்டமாக அறநிலையத் துறைக்குத் தெரிவித்தால் அதற்கு பொதுமக்கள் சார்பில் எவ்வளவு நீங்கள் போடுகிறீர்கள் என்ற விவரத்தையும் தெரிவித்தால் எப்படியும் அந்தத் திருப்பணியை நிறைவேற்றி வைப்பதற்கு அறநிலையத் துறை தன்னாலான அத்தனை உதவியையும் முடிந்த அளவிற்கு அதற்குச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிரீன்வேஸ் சாலையில் தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம்.

575—(*வினா எண். 5756)—திருமதி ப. வளர்மதி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மயிலாப்பூர் வட்டம், கிரீன்வேஸ் சாலையில் தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மாநாட்டு அரங்கம் ஒன்று கட்டுவதற்காக நிலத்தை, செய்தி மற்றும் சுற்றுலாத் துறைக்கு மாற்றுவதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.